Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~

~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154-இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081687

1. District : Dharmapuri PS: V & AC Year: 2024 FIR No.: 07/AC/2024 Date: 25.10.2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act, 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 22.10.2024 at about 15.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 23.10.2024 at about 11.00 hrs
Time Period : Time from : Time to : and 24.10.2024 at about 16.45 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 25.10.2024 at 16.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Chinnampalli Panchayat, about 35 kms South-West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. P. Seshadhri (b) Father's/ Husband's Name : Padmanaban. K
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 49 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Agriculturalist (g) Address : No.71-C, Jarandapallam, Koppalur Kanavai, Chinnampalli Post, Pennagaram Taluk, Dharmapuri District
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Rajinikanth, Panchayat Secretary, O/o the Chinnampalli Panchayat, Pennagaram Panchayat Union, Dharmapuri District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P Sekhar 25/10/24 — 25/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.10.2024 at 09.00 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் ..........
V & AC,
DHARMAPURI

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி .

******

இன்று 25.10.2024-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 16.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது, தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், சின்னம்பள்ளி அஞ்சல், கொப்பலூர் கணவாய், ஜாரண்டபள்ளம் என்ற முகவரியைச் சேர்ந்த K.பத்மநாபன் மகன் P.சேஷாத்திரி என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புதல், P.சேஷாத்திரி, வயது–49, த/பெ.K.பத்மநாபன், கதவு எண்.71–C, ஜாரண்டபள்ளம், கொப்பலூர் கணவாய், சின்னம்பள்ளி அஞ்சல், பென்னாகரம் தாலுக்கா, தருமபுரி மாவட்டம். பெறுதல், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, தருமபுரி. அப்பா, நான் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், சின்னம்பள்ளி கொப்பலூர் கணவாய் என்ற இடத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் புரோகிதம் தொழில் செய்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அப்பா பத்மநாபன் அவர்கள் சுமார் 11 வருடங்களுக்கு முன்பு அரசு வழங்கும் இலவச வீடு கேட்டு சின்னம்பள்ளி பஞ்சாயத்து ஆபிசில் மனு கொடுத்திருந்தார். பிறகு, எனது அப்பா 28.11.2013 அன்று இறந்துவிட்டார். அதன் பிறகு நான் 2023ஆம் ஆண்டு, சின்னம்பள்ளி பஞ்சாயத்து ஆபிஸ் சென்று அங்கிருந்த பஞ்சாயத்து செயலர் திரு.ரஜினிகாந்த் அவர்களிடம் இலவச வீடு சம்மந்தமான எனது அப்பாவின் மனு குறித்து கேட்டேன். அதற்கு அவர் உங்களது அப்பா பெயரில் இலவச வீடு இன்னும் ஒதுக்கப்படவில்லை எனவும், அவ்வாறு ஒதுக்கீடு ஆணை வரப்பெற்றால் உங்களுக்கு தகவல் சொல்கிறேன் என்று என்னிடம் சொன்னார். இந்நிலையில் இந்த வருடம் 2024 ஜீலை மாதம் இரண்டாவது வாரம் ஒரு நாள் பஞ்சாயத்து செயலர் திரு.ரஜினிகாந்த் எங்களது வீட்டிற்கு வந்து என்னிடம் உங்கள் அப்பாவிற்கு அரசு வழங்கும் இலவச வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், உங்க அப்பா இறந்து விட்டதால் உங்களது அம்மா பெயரில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் இலவச வீடு பெற வேண்டுமென்றால் உங்கள் அப்பாவின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்று, வங்கி கணக்கு புத்தக நகல், ஆதார் கார்டு நகல் மற்றும் இரண்டு போட்டோ ஆகியவற்றை

பஞ்சாயத்து அலுவலகத்திற்கு எடுத்து வருமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். பின்னர், நான் அடுத்த நாளே அவர் கேட்ட ஆவணங்களை எடுத்துக்கொண்டு எனது அம்மா சந்திரா அவர்களுடன் சின்னம்பள்ளி பஞ்சாயத்து . ஆபிசிற்கு சென்று திரு.ரஜினிகாந்த்திடம் கொடுத்தோம். அவற்றை வாங்கி வைத்துக்கொண்டு எனது அம்மாவிடம் இலவச வீடு சம்மந்தமான மனுவில் கைரேகை வாங்கினார். பின்னர், இலவச வீடு ஒதுக்கீடு செய்ய ஏற்பாடு செய்வதாகவும், அதற்கு கொஞ்சம் செலவு ஆகும் என்றும், ஒதுக்கீடு ஆணை வந்தவுடன் தகவல் தெரிவிப்பதாகவும் எங்களிடம் சொல்லி அனுப்பி வைத்தார். பின்னர் நான் போன செப்டம்பர் மாதம் மூன்றாவது வாரம் ஒரு நாள் திரு.ரஜினிகாந்த் அவர்களை பஞ்சாயத்து ஆபிசில் சந்தித்து, எனது அம்மா திருமதி.சந்திரா பெயரில் இலவச வீடு வேண்டி கொடுத்திருந்த மனு குறித்து கேட்டேன். அதற்கு அவர் இன்னும் ஒதுக்கீடு ஆணை வரவில்லை என்றும், அப்படி வந்தால் தகவல் சொல்கிறேன் என்றார். அதற்கு, நான் மாட்டு கொட்டாயில் தான் குடியிருந்து வருகிறோம் என்று சொன்னேன். அதற்கு அவர், சரி போங்க பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பி வைத்துவிட்டார். பிறகு 22.10.2024 அன்று மதிபம் சுமார் 03.00 மணிக்கு நான் உறவினர் ஒருவரின் இறுதி சடங்கில் மேட்டூரில் இருந்தபோது திரு.ரஜினிகாந்த் செல் நெம்பர்.9787031339 லிருந்து எனது செல் நெம்பர்.9443244661 றகு போன் பண்ணி எனது அம்மா பெயரில் இலவச வீடு ஒதுக்கீடு கிடைக்க ஒரு வருடத்திற்கு மேல் ஆகும் என்றும், ரூ.5,000/– கொடுத்தால் விரைவில் இலவச வீடு ஒதுக்கீடு பெற்று வேலை உத்தரவு வாங்கி தருகிறேன் என்றும், அடுத்த நாள் அவரை அவரது ஆபிசில் வந்து சந்திக்குமாறும் சொன்னார். அதற்கு நான், சரிங்க சார், நான் ஊருக்கு வந்து பணம் ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். பிறகு, மீண்டும் 23.10.2024 தேதி காலை சுமார் 11.00 மணிக்கு திரு.ரஜினிகாந்த் அவர்கள் எனக்கு போன் செய்து பணம் ரெடி பண்ணிட்டியா என்றும், ஏன் பஞ்சாயத்து ஆபிசிற்கு வரவில்லை என்றும் கேட்டார். அதற்கு நான் பணம் ரெடி பண்ணிட்டு வந்து பார்க்கிறேன் சார் என்று சொன்னேன். அதன்பிறகு 24.10.2024 தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு திரு.ரஜினிகாந்த் அவர்கள் மீண்டும் எனக்கு போன் செய்தார். நான் வேலையாக இருந்ததால் போன் எடுக்கவில்லை. பிறகு அன்று மாலை சுமார் 4.45 மணிக்கு நான் திரு.ரஜினிகாந்த் அவர்களுக்கு போன் செய்தேன். அப்போது அவர் பணம் ரூ.5,000/–ரெடி

பண்ணிட்டியா என்று கேட்டார். அதற்கு நான், கொஞ்சம் குறைத்து சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் குறைக்க முடியாது என்றும், ரூ.5,000/– கொடுத்தால் தான் இலவச வீடு கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று முடிவாக சொல்லிவிட்டார். மேலும் அவர் கேட்ட பணம் ரூ.5,000/–த்தை எடுத்துக்கொண்டு அவரை எப்போது வேண்டுமானாலும் சந்தித்து கொடுக்குமாறு சொல்லி போனை வைத்துவிட்டார். ஆனால், அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/–த்தை கொடுத்து, எனது அம்மா சந்திரா பெயரில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் இலவச வீடு ஒதுக்கீடு பெறுவதற்கு எனக்கு விருப்பமில்லை. அதனால், 26.10.2024–ம் தேதி சனிக்கிழமை அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/–த்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் சின்னம்பள்ளி பஞ்சாயத்து செயலர் திரு.ரஜினிகாந்த் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் P.Seshathri, 25.10.2024. Sir, Received a written report on 25.10.2024 at 16.00 hrs and further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of the accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.7/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 25.10.2024 at 16.45 hrs against the accused Tr.Rajinikanth. The original FIR and the complaint of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

[signature] 25/10/2024

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.